● புலனாய்வுக் குழுவினரின் புதிய தகவல்!

# கொழும்பு குண்டுத் தாக்குதலுக்கான மருந்து யாழ்ப்பாணத்திலிருந்து சென்றதாம்

கொழும்பில் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் மீதான வெடி குண்டுத் தாக்குதலுக்குப் பயன்பட்ட வெடி மருந்து யாழ்ப்பாணத்திலிருந்தே கொண்டு வரப்பட்டதாம். இத்தகவலை நேற்றுக் கொழும்பில் புலனாய்வுப் பிரிவினர் வெளியிட்டுள்ளனர். இந்த வெடி மருந்துகள் சம்பவத்தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாகவே யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டுவரப்பட்டன எனவும் விடுதலைப்புலிகளின் வெடி குண்டு நிபுணர் எனக்கருதப்படும் ரவிசங்கர் என்பவரே இதை எடுத்து வந்தர் எனவும் புலனாய்வுக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர். வல்வெட்டித் துறையைச் சேர்ந்த இருபது வயதான சந்திரன் என்பவரே வெடிமருந்து ஏற்றிய வாகனத்தைக் கூட்டுப் படைத் தலைமையகம் நோக்கி ஓட்டிவந்து வெடிக்க வைத்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது தாக்குதலில் ஈடுபட்டவர்கள் கொழும்பில் தெஹிவளையில் தங்கியிருந்ததாகவும் வெள்ள

—04 ஆம் பக்கம் பார்க்க


பக்கங்கள் நான்கு    விலை ரூபா: 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 218 பிரசோற்பத்தி ஆனி 20 (04 - 07 - 1991) வியாழன்


★ 'புரொன்ட்லைன்' சஞ்சிகை தகவல்

# இனப் பிரச்சினைத் தீர்வுக்கு புதிய சமரசத் திட்டம்

## மூன்று மாத காலத்தில் இறுதி ஒப்பந்தம் கைச்சாத்திடப் படவேண்டுமாம்!

வடக்குக்கிழக்குப் பிரச்சினைக்கான புதிய சமரஸத் திட்டம் ஒன்றை அரசு தயாரித்துள்ளதாக இந்தியச் சஞ்சிகையான 'புரொன்ட் லைன்' தகவல் வெளியிட்டுள்ளது.

அமைச்சர் தொண்டமானால் தயாரரிக்கப்பட்தாகக் கருதும் இச்சமரஸத்தின் படி

★ வடக்கு கிழக்கிற்கு வழங்கப்படக்கூடிய அதிகாரங்கள் குறித்து 100 நாள்களினுள் (மூன்று மாதம்) பேசிமுடித்து அரசும் விடுதலைப்புலிகளும் இறுதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்.

★ இப்படியான பேச்சு வார்த்தையின் போது புலிகளும் அரசும் மட்டுமே நேரடியாகக்கலந்து கொள்ள வேண்டும்.

★ விடுதலைப்புலிகள் வன்முறையைக் கைவிட்டதாகப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

★ மாகாணசபை அதிகாரத்

—04ஆம் பக்கம் பார்க்க

## பதிவு செய்யாதவர்களை நாடு கடத்த முயற்சி?

தமிழகத்தில் அகதி முகாம்களுக்கு வெளியே உள்ள இலங்கைத் தமிழர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில்தம்மைப்பதிவுசெய்யுமாறு தமிழக அரசு விடுத்த காலக்கெடு 6ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இக்காலத்தினுள் தம்மைப்

—04ஆம் பக்கம் பார்க்க

## மன்னார்த்தீவில் மோதல் 4 போராளிகள் வீரமரணம்

மன்னார்த் தீவில் ஓலைத்தொடுவாய் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் ரோந்து சென்றபோது எதிர்பாராத விதமாக விடுதலைப் புலிகள் அணியினரைச் சந்தித்தனர்.

இரு பகுதியினரிடையே சில மணிநேரம் கடும் மோதல் நடைபெற்றது. இதில் இரு சிப்பாய்கள் பலியாகினர். நான்கு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

கப்டன் அலன் (வி. அல்பிரட் மன்னார்), 2 ஆம்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## அரசை மிரட்டமுடியாது என்கிறார் பிரதமர்

வடக்குக்கிழக்குத்தீவிரவாதம். விரைவில் ஒழிக்கப்படும் என்கிறார் பிரதமரும் பாதுகாப்பு இணையமைச்சருமான டி. பி விஜேதுங்க.

வெடிகுண்டுகளால் அரசை மிரட்ட முடியாது எனவும் அவர்குறிப்பிட்டார். கம்புறுப்பிட்டியில் கம்உதாவ இறுதி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## வெள்ளவத்தையில் ஜே.வி.பி யினர் கைது

வெள்ளவத்தைப் பகுதியில் இரு ஜே. வி. பி. தலைவர்கள் கைது செய்யப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் நேற்றுத்தெரிவித்தன.

கதிர்காமம், பதுளை பகுதி ஜே. வி. பி. தலைவர்களே கைதானதாகவும் இவர்களிடமிருந்து ரி-81 ரக துப்பாக்கிகளும் மீட்கப்பட்டதாகத்தெரிவிக்கபபடுகிறது.

## பாடசாலையில் இருந்து இராணுவம் வாபஸ்

மட்டக்களப்பு ஆரையம்பதி, செட்டிபாளைமகாவித்தியாலயத்தில் முகாமிட்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அங்கிருந்து வாபஸ் பெற்று அருகிலுள்ள முகாமிற்குச் சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

கடந்த ஏழு மாதகாலமாக இங்கு முகாமிட்டிருந்த இந்த இராணுவத்தினருக்குப் போதியளவு வசதிகள் இல்லாது இருப்பதனாலேயே இவ்வாறு வெளியேறியதாகத் தெரியவருகிறது.

இதேவேளை தொடர்ந்தும் அங்குள்ள பாடசாலைகள் வெறிச்சோடிய நிலையில் காணப்படுவதாகவும் தெரிகிறது. (ப 11)

## கொழும்பு நகரில் சிங்கள இளைஞரும் கைது

கொழும்பில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமையைப் பயன்படுத்தி தென் பகுதியில் இருந்து ஜே வி.பி இயக்கத்தினர் கொழும்பில் ஊடுருவிஉள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு நகரில் அண்மையில் ஏற்பட்ட சுற்றிவளைப் பின் போது சிங்கள இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (33)

## லோகசபை 12 இல் கூடும்

இந்தியாவின் புதிய சிறுபான்மை அரசு எதிர்வரும் 12 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்

—04ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டனின் இலங்கைக்கான உதவிகள் நிறுத்தப்பட்டன!

பிரிட்டிஷ் தூதுவர் கிளாஸ் ரோனை இலங்கை அரசு வெளியேற்றியதற்கு எதிர் நடவடிக்கையாக பிரிட்டன் தனது இலங்கைக்கான ஒரு வருட நிதியுதவியை நிறுத்தியுள்ளது

இலங்கையில் புதிய பிரிட்டிஷ் தூதுவர் நியமிக்கப்பட்ட பின்னரும், மனித உரிமை தொடர்பாக இலங்கை அரசின் போக்குக்குறித்து முடிவு எடுக்கப்பட்ட பின்னருமே உதவி நிறுத்தம் பற்றிப் பரிசிலிக்கப்படும் எனப் பிரிட்டன் அறிவித்துள்ளது.

நேற்றுக்காலை லண்டனில் உள்ள பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சுக்கு அழைக்கப்பட்ட இலங்கைத் தூதுவர் சேபால ஆட்டிக்கலவுக்கு பிரிட்டனின் இந்நடவடிக்கைகள் பற்றி பிரிட்டிஷ் உதவி வெளி விவகார அமைச்சர் விளக்கமளித்தார்.

பிரிட்டனின் இலங்கைக்கான இராணுவ தளபாட உதவியிலும் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது.

—04ஆம் பக்கம் பார்க்க

## குண்டு வெடிப்பு தொடர்பாக 100பேர் தடுத்துவைப்பு

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையலுவலகம் மீது இடம் பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாகச் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட முன்னூறு பேரில் 200 பேர் பொலிஸ் விசாரணைகளையடுத்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மிகுதி நூறு பேர் மீதும் புலனாய்வுக் குழு தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றது.

இத் தாக்குதலுக்கான சூத்திரதாரிகள் புலனாய்வுப் பிரிவினரிடம் சரண் அடையும் வரை இந்த நூறு பேரும் தொடர்ந்தும் தடுப்புக் காவ

— 04ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பு விவசாயிகள் வயலுக்குச் செல்ல அச்சம்

மட்டக்களப்புப் பகுதி விவசாயிகள் தமது வயலுக்குச் செல்ல அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதனால் இம்மாவட்டத்தில் 1950 ஹெக்டேர் நிலப்பரப்பு விவசாயம் செய்யப்படாது வெறும் நிலங்களாகும் நிலைமை தோன்றியுள்ளது.

வயல்வெளிகளில் படையி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## நிமிடத்துக்கு ஒரு பூகம்பம்

நில நடுக்கம் அரிதாக ஏற்படுகின்றது என்றுதான் இதுவரை காலமும் நம்பப்பட்டு வந்தது. ஆனால் சமீபத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டில் எரிமலை வெடித்ததும் அதனைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்ட பூமி அதிர்ச்சியை ஆராய்ந்த புவியியலாளர்கள், நிமிடத்துக்கு ஒரு பூகம்பம் பூமியில் எங்காவது ஒரு இடத்தில் ஏற்பட்டுக் கொண்டிருப்பதாக தமது அறிக்கையில் ஆதாரங்களுடன் கூறியுள்ளனர்.

அதிர்ஷ்டவசமாக ஆண்டுக்குப் பத்து முதல் இருபது வரையான பூகம்பங்கள் தான் உயிர்ச்சேதம் மற்றும் உடமைச் சேதங்களை ஏற்படுத்துகின்றன. ஜப்பானில் தினமும் பூமியதிர்ச்சிகள் ஏற்படுகின்றன. ஆனால் இவைகள் வெறும் நடுக்கங்களுடன் நின்றுவிடுன்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (16)

★ ஐ. நா. அகதிகள் அமைப்பு அரசிடம் எடுத்துரைப்பு

# தமிழக அகதிகளின் புனர்வாழ்வுக்கு ஏற்ற சூழ்நிலை இங்கு இல்லை!

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளை இங்கு திருப்பி அனுப்புவதை முழுமையாக ஏற்பதிலுள்ள தடங்கல்கள் பற்றி ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் இலங்கை அரசிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழகத்தில் தற்பொழுது சுமார் இரண்டரை லட்சம் இலங்கைத் தமிழர்கள் உள்ளனர். இவர்கள் இங்குதிருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் அவர்களைப் பொறுப்பேற்று குடியமர்த்திப் பராமரிக்க வேண்டிய கடமை ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தையே சார்ந்தது ஆகும்

இங்குள்ள தற்போதைய சூழ்நிலையில் இவ்வளவு தொகையான அகதிகளை ஒரேயடியாகப் பொறுப்பேற்று, அவர்களைப் பராமரிப்பதில் நிதி மற்றும் மருத்துவம் உள்ளிட்ட புனர்வாழ்வில் நெருக்கடிகள் எதிர்நோக்கப்படுவதாக இதுபற்றி ஆராய்ந்து வரும் இலங்கை அரசின் உயர்மட்டக் குழுவுக்கு ஐக்கிய நாடுகள் அகதிகள் அமைப்பு எடுத்துரைத்துள்ளது.

தற்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள அகதிகளுக்கு மட்டும் வருடாந்தம் 50 லட்சம் ரூபாவை ஐ. நா. அகதிகள் அமைப்பு செலவிட்டு வருகின்றது. இந்திய அகதிகளும் இங்கு அனுப்பப்படும் பட்சத்தில் பெருமளவு நிதி தேவைப்படுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-11)

## திருமலைகுடியேற்றவாசிகளுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணம்

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களுக்கும், இந்து ஆலயங்களுக்கும், அரசுக்கும் சொந்தமான காணிகளில் இராணுவ உதவியுடன் புதிதாக குடியமர்த்தப்பட்டு வரும் சிங்களவர்க்கு மீளக்குடியமர்தல் நிதி விசேட பணிப்பின் பேரில் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் உண்மையாகவே இந் நிதியைப் பெறத் தகுதியுடைய பாதிக்கப்பட்ட தமிழர்கள் தொடர்ந்தும் அகதி முகாம்களிலேயே வசிப்பதாகவும், அவர்களுக்கு மீளக்குடியமர்தல் நிதியை வழங்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## 'தென்தமிழீழ போராளிகளின் பங்களிப்பை மறக்க முடியாது'

"தமிழீழத்தின் தலைநகர் திருகோணமலை என்றுஎமது தலைவர் பிரபாகரன் என்றோ கூறி விட்டார். அந்தத் தலைநகரில் இன்று சிறீலங்கா அரசபடைகள் வெறியாட்டம் போடுகின்றன. யாழ்ப்பாணத்தை விடுவித்தது போல், திருகோணமலையையும் நாம் முழுமையாக விடுவிக்கவேண்டிய நிலையில் உள்ளோம்"

கிளிநொச்சி மாவட்டம், கனகபுரம் என்ற இடத்தில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் பங்கு பற்றி உரையாற்றிய விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தரும், கவிஞருமான மு. வே. யோ. வாஞ்சிநாதன் குறிப்பிட்டார் தென் தமிழீழத்தில், எமது பாசமிகு மக்கள் படும் தொல்லைகள், வேதனைகள் சொல்ல முடியாதவை இன்று யாழ்ப்பாண மண்ணில் அரசின் வெறிப் படைகள் கால் வைக்கமுடியாமல் இருப்பதற்குக் காரணம் தமிழீழ விடுதலைப் புலிகளின் வீரமும், தியாகமும் நிறைந்த போராட்டம் என்பதை அனைவரும் அறிவர். அதே வேளை, இந்த யாழ்ப்பாண மண்ணை எமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக தென்தமிழீழப் போராளிகள் ஆற்றிய பங்கை எவரும் மறந்து விட முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

## இலங்கை ஹாஜிமார் ஐவர் சவுதிப் பொலிஸாரால் கைது!

தனியார் வாகனமொன்றில் சென்ற ஐந்து இலங்கை ஹாஜிமார்களைச் சவுதிப் பொலிஸார் கைது செய்து 5 தினங்கள் தடுத்து வைத்திருந்து விட்டுப் பின்னர் விடுதலை செய்துள்ளனர்

இவர்கள் ஹஜ் யாத்திரையை மேற்கொண்டுவிமான மூலம் ஜித்தா சென்றனர். அங்கிருந்து மக்காவுக்கு தனியார்வாகனத்தில்போகும் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்

சவுதியின் சட்ட விதிகளை மீறியமைக்காகவே இந்த ஐவரும் கைது செய்யப்பட்டதாகப் பின்னர் வந்த செய்திகள் தெரிவிக்கின்றன

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை 15-ம் திகதிமுதல் இருநேரமாகும்

எதிர் வரும் 15ஆம் திகதி தொடக்கம் கோப்பாய் ஆசிரிய கலாசாலை இரு நேரமாகச் செயற்படுமென அதிபர் வை சிவப்பிரகாசம் அறிவித்துள்ளார்,

இதேவேளை மேற்படி கலாசாலை இரண்டாம் வருடப் பயிலுநர்கள் யாவரும் இடமாற்ற விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்காக வெளியக கற்பித்தல் பயிற்சி முடிவடைந்ததும் பிற்பகல் 3.15 மணிக்கிடையில் கலாசாலைக்கு சமூகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

## பயன்படுத்தப்படாத காணிகளை சுவிகரிக்க சட்டம் தயாராகிறது

தெற்கில் பயன்படுத்தப்படாத காணிகளை சுவிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான சுற்றுநிருபமொன்று கமநலச் சேவைத் திணைக்களத்தினால் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. இதற்குரிய சட்டத்திருத்தமொன்றும் கொண்டுவரப்படவுள்ளது.

இக்காணிகள் சுவிகரிக்கப்பட்டு காணியற்ற ஏழைகளுக்கு விவசாயச் செய்கைக்காக குத்தகைக்கு வழங்கப்படும்.

## முத்தமிழ் வித்தகர் வாழ்க்கை வரலாறு

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் வாழ்க்கைத் வரலாற்று நூலை ஆங்கிலத்தில் வெளியிட இந்து கலகசார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நூலை மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலய முன்னாள் அதிபரும் அறிஞருமான கே. கணபதிப்பிள்ளை ஆங்கிலத்தில் எழுதவுள்ளார்.

# செய்தி உலகம்

## இந்தியாவும் கடனாளியாகிறது

இந்தியாவுக்கு உலகவங்கி 45 கோடி டாலர்களைக் கடனாக வழங்கியுள்ளது. இது தவிர ஆசிய அபிவிருத்தி வங்கியும் இந்தியாவுக்கு 30 கோடி டாலர்களைக் கடனாக வழங்க முன்வந்துள்ளது.

உலகவங்கி வழங்கியுள்ள 45 கோடி டாலர்கள் கடன் 20 வருட காலத்தில் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும்.

## சதாமின் ஆட்சி கவிழும்

இன்னும் நான்கு மாதங்களுக்குள் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் கவிழ்க்கப்படுவார் என்று ஈரானின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதிகாரத்தினால் அரசாங்கத்தைக் கொண்டு செல்ல ஈராக் அரசுக்கு வளமில்லாததே இதற்குக் காரணமெனவும் அவர் தெரிவித்தார்.

## சீனா தண்டனை பெறும்

பாகிஸ்தானுக்கு சீனா ஏவுகணைகளை விற்பனை செய்தால் அதன் மீது தடைகளை ஏற்படுத்த அமெரிக்கா ஆலோசித்து வருகிறது.

ஏவுகணைகளை சீனா விற்றுள்ளதா என்பது குறித்து அமெரிக்கா விசாரணை நடாத்தி வருவதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

### பணிந்திடுவேன் உன்பதமே! அம்மா!!

ராகம் :- அமிர்தவர்ஷினி தாளம் :- ஆதி

பல்லவி

பன்றித்தலைச்சி யம்மா! கண்ணகையே! - என்றும்
அன்புடன் பணிந்திடுவேன் உன்பதமே - அம்மா!
(பன் .........)

அனுபல்லவி

மருதநிலக் கரையில் நிறைந்திருக்கும் - குளிர்
மருதமர நிழலில் அமர்ந்திருப்பாய் - ஒளிர்
(பன் ........ )

சரணம்

நோயென அடைந்தவர்க்கு நோய் துடைப்பாய்-அன்புச்
சேயென அணைத்தவர்க்குன் அருளளிப்பாய் - பண்புத்
தாயென அழைத்தவர்க்குன் அமுதளிப்பாய் - யாவும்
நீயென அடைந்தவர்க்குன் பதமளிப்பாய் - அம்மா!!
(பன் ........ )

- முருகு


## சிறு விளம்பரம்

### தேவை

கனடாவின் நிரந்தரப் பிரஜையும் 32 வயதுமுடையவருமான வேளாள குல மகனுக்கு பெற்றோர் படித்த அழகிய மணப்பெண் தேடுகிறார்கள். முதற்கண் சாதகப் பிரதியுடன் கீழ்க்கண்ட விளம்பர இலக்கத்திற்கு மனுச் செய்யவும். சாதகப் பொருத்தம் காணப்படின் நேரடித்தொடர்பு கொள்ளப்படும். விளம்பர இல 301, முரசொலி, கல்வியங்காடு. 07023

### தேவை

"கோடை" நாடகத்தில் நடிப்பதற்கு நடிக, நடிகையர்கள் தேவை. ஆர்வமுள்ள கலைஞர்கள் 7. 7. 91 ஞாயிறு பி. ப. 2 மணிக்கு நேரில் வரவும். பட்டப்படிப்புகள் கல்லூரி, 57/48 ஸ்ரான்லி வீதி, (இலங்கை வங்கி முன்பாக) யாழ்ப்பாணம் 07022

### விற்பனைக்கு

மில்க்வைற்சலவைத், தூள் சிறப்பாகவெளுக்கிறது. 50 கிறாம் பக்கற் ரூபா. 6/- மட்டுமே. 100 வெற்றுப் பக்கற்றுகள் அனுப்பிஅழகிய கைலேஞ்சியை அன்பளிப்பாகப் பெறுங்கள் மில்க்வைற் யாழ்ப்பாணம். 07010

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், முல்லைத்தீவுக் கிளை.

**நிர்வாக உதவியாளர்/கணக்காளர்**

மேற்படி வெற்றிடத்துக்கு தகைமையுள்ளோரிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றன. 15-07-91க்கு முன் அனுப்பி வைக்கவும். முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

கௌரவசெயலாளர்

புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

07021

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**Spoken English With Grammer**

**BY BRITTO**

ஆரம்பம்: 03 - 07 - 91 புதன் 11 மணி.

A/L - 91 Day Classes

வினா - விடை (எல்லாப் பாடங்களும்) ஆரம்பமாகிவிட்டன.

07015

# இலங்கை இன விவகாரம்;

## உன்னிப்பாக அவதானிக்கிறோம் - சுவீடன்

இலங்கை நிலைவரத்தை மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாக சுவீடிஷ் அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பான செய்திக் குறிப்பொன்றை சுவீடிஷ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்களுக்கும்- அரசுக்குமிடையே உள்ள பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு உடனடியாகப் பேச்சு வார்த்தைஆரம்பிக்க வேண்டுமென்ற விருப்பத்தையும் இச் செய்திக்குறிப்பின் மூலம் சுவீடிஷ் அரசு வெளியிட்டுள்ளது.

இதுவிடயமாக இலங்கை அரசின் உயர் மட்டத்தில் சுவீடிஷ் அரசு ஏற்கனவே தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களை ஆரம்பிக்க சகல ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக உள்ளதாகவும் இச் செய்திக் குறிப்பில் சுவீடிஷ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

## தண்டவாள மந்திரியின் தேரிவில் வண்டவாளமா?

இந்தியாவில் அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் பல அதிசயங்கள் நடந்துள்ளன. அவற்றில் ஒன்று இது.

வட பெங்களூர் நாடாளுமன்றத் தொகுதியிலுள்ள வாக்காளர் தொகை 6,20,518. ஆனால் இத் தேர்தலில் அத் தொகுதியில் பதிவான வாக்குகள் 8,32,465 ஆகும்.

எப்படியிருக்கிறது அதிசயம் 6 லட்சம் பேர் இருக்கும் தொகுதியில் 8 லட்சம் பேர் வாக்களித்திருக்கிறார்கள். இது ஓர் அதிசயம்தானே.

இந்தத் தொகுதியில் ஒரு காங்கிரஸ்காரர் அதுவும் இந்திய மத்திய அமைச்சரவையின் உறுப்பினர் வெற்றி பெற்றுள்ளார். அவர் யார் தெரியுமா?

ஜனாப் ஜஃபர் ஷரீப் தான் அவர். இந்திய ரயில்வே அமைச்சராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஸ்ரீபால நியமனம்

தமிழக காவற்துறைத்தலைவராக ஸ்ரீபால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் காவற்துறை பல உயர்அதிகாரிகளும் மாற்றப்பட்டுள்ளனர்.

புதிய அரசு பதவியேற்றதையடுத்து சிவில் நிர்வாக அதிகாரிகள்பலரும்மாற்றப்பட்டுப் புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இல. இசைக்குழு உறுப்பினர் அவுஸ்திரேலியாவில் கைது!

இலங்கையிலிருந்து தர்ம நிதிக்கென இசை நிகழ்ச்சி நடத்தச் சென்ற இசைக்குழுவொன்றின் உறுப்பினர்கள் அவுஸ்திரேலியாவில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக்குழுவில் ஐவர்மீது குற்றம் சாட்டி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆறாவது நபர்மீது போதை வஸ்துக் குற்றச்சாட்டும், மேலும் மூவர் மீது சட்ட விரோதகுடியேற்றக் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த இசைக்குழுவுடன் சென்ற 60 பேர் மெல்போர்னில் தங்கியுள்ளனர். அடுத்த சில தினங்களில் இவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்படுவார்கள் எனவும் தெரிய வருகின்றது.

## இரு சந்தேகநபர்களே இன்னும் எஞ்சியுள்ளனராம்

ராஜீவ்கொலை தொடர்பாகத் தேடப்பட்டுவந்த புகைப்படக் கலைஞர் சுபா சுந்தரம் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இவரையும் சேர்த்து இக்கொலை தொடர்பாக இது வரை ஆறு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்னும் இரு சந்தேக நபர்களே இக்கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட வேண்டியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## குண்டுக்குப்பலியான சிப்பாயின் குடும்பத்திற்கு முதல் வீடு

கம்புறுப்பிட்டிய 'றுகுணகம' மாதிரிக்கிராம வீடமைப்புத் திட்டத்தில் முதல் வீடு கொழும்புக் கூட்டுப் படைத் தலைமையகக் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட இராணுவ சிப்பாய் விஜய பாகுவின் குடும்பத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவரின் நான்கு சகோதரர்களில் இருவர் இராணுவத்திலும், ஒருவர் பொலிஸிலும் உள்ளனர்.

இராணுவத்திலுள்ள ஒரு சகோதரர் விடுதலைப் புலிகளுடனான மோதலில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## உலகவங்கியின் அனுசரணையுடன் யாழ் நகரில் தொழிற் பயிற்சி

உலகவங்கியின் அனுசரணையுடன் தொழில் பயிலுநர் சபையால் கட்டிட நிர்மாண மேற்பார்வையாளர் பயிற்சி நெறியொன்று யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியை மேற்கொள்வதற்குப் புதிய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க. பொ. த சாதாரண தரத்தில் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருப்பவர்கள் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். இவர்கள் கணிதம், விஞ்ஞானம் உட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். 01.07.91 இல் 16- 25 வயதுக்கு இடைப்பட்டோரே விண்ணப்பிக்க முடியும்.

கல்லூரிப் பயிற்சியின்போது நாள் ஒன்றுக்கு 20 ரூபாவும், தொழில் நிலையப் பயிற்சியின்போது 15 ரூபாவும் வழங்கப்படும். விண்ணப்ப இறுதித் திகதி இம் மாதம் 10 ஆம் திகதியாகும். ப-7)

## கோரப்படாத பதவிக்கு 100 பேர் விண்ணப்பம்

கிராம சேவையாளர் தெரிவுக்கு விண்ணப்பங்கள் உள்ளூர் பத்திரிகைகள் மூலம் விரைவில் கோரப்படவுள்ளதாகச் செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும் இப் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படாமலேயே 100க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் செயலகத்தில் இதுவரை கையளிக்கப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமெனவும், விண்ணப்பங்கள் தற்பொழுது யாழ் செயலகத்தில் ஏற்கப்படாதெனவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் கோரப்படும் போதே அனுப்பிவைக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (16)

## 644 பல்கலைக்கழக மாணவர்க்கு 6 ஆம் திகதி பட்டமளிப்பு

யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா ஜூலை 6ஆம் திகதி பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெறவுள்ளது.

காலை 9.30 மணி, மூற்பகல் 11.30 மணி என இரு பிரிவுகளாக இப்பட்டமளிப்பு இடம்பெறும்.

644 பேருக்கு இப்பட்டமளிப்பில் பட்டமளிக்கப்படும். இதில் 476 பேர் நேரில் சமுகமளித்துப் பட்டத்தைப் பெற்றுக் கொள்ளுவர்.

கலாநிதி, கலைமாணி, முதுமாணி, விஞ்ஞானமாணி, வர்த்தகமாணி, எம். பி. பி. எஸ். பட்டம், சித்த வைத்தியர் பட்டம், டிப்ளோமாப் பட்டம், டிப்ளோமா நுண்கலைப் பட்டம் ஆகியன இப் பட்டமளிப்பில் வழங்கப்படும்.

### செஞ்சிலுவை உதவும்

யாழ் மாவட்டத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தால் குடிசைகளில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உடுபுடவைப் பார்சல்கள் வழங்கவுள்ளது.

## எம்.எஸ்.எப்.டாக்டர்களில் 20 பேர் தென்பகுதியில்!

இலங்கையில் மருத்துவப் பணிக்கென வந்த பிரான்ஸ் வைத்தியர்களில் அரைவாசிப் பகுதியினர் தற்பொழுது தென்பகுதியிலேயே கடமை புரிவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எம். எஸ். எப். எனப்படும் இந்த அமைப்பு டாக்டர்களில் மொத்தம் 40 பேர் தற்பொழுது இலங்கையில் சேவையில் உள்ளனர்.

இவர்களில் அறுவர் திருமலையிலும், அறுவர் மன்னாரிலும் கடமை புரிகின்றனர். பருத்தித்துறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா நால்வர் பணிபுரிகின்றனர்.

மிகுதி 20 பேரும் தென் பகுதியிலேயே கடமை புரிந்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-11)

## புதிய மருத்துவ மாதர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் மருத்துவ மாதர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி நடாத்தப் படவுள்ளது.

இதில் சித்தியடைந்தவர்கள் விகிதாசாரத்திற்கேற்ப நியமிக்கப்படுவார்கள்.

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த பெண்கள் இம்மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும் 74

## ஆங்கில, சிங்கள மொழி அறிவு தமிழ் மாணவரிடம் பரீட்சிக்கப்படும்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை அடுத்த மாதம் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நாடு முழுவதிலும் மொத்தம் இரண்டரை லட்சம் மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவர்.

இம்முறை முதற் தடவையாக ஏனைய மொழிகளின் ஆற்றலைப் பரிசோதிக்கும் வினாத்தாள் ஒன்றும் இப் பரீட்சையில் வழங்கப்படும்.

தமிழ் மாணவர்களிடம் ஆங்கில, சிங்கள மொழிகளின் அறிவு இவ் வினாத்தாளின் மூலம் பரீட்சிக்கப்படும்.

## முத்தமிழ் விழா நிகழ்ச்சி; உலகத் தமிழர் காண வாய்ப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை-பண்பாட்டுக் கழகத்தினர், கடந்த ஆனிமாதம் 6 ஆந் திகதி தொடக்கம், 15 ஆந் திகதி வரை நடத்திய, மாபெரும் ''முத்தமிழ் விழா'' வின் கலை-இலக்கிய நிகழ்வுகள் யாவும் ''ஒளி-ஒலிப் பதிவு நாடா'' க்களாக வெளிவரவிருக்கின்றன.

பகுதி, பகுதியாகத் தொகுக்கப்பட்டு வெளியிடப் படவுள்ள இந்த ''வீடியோ'' கசெற் பிரதிகள், உலகம் முழுதுவம் பரந்து வாழ்கின்ற தமிழர்களிடையேமிகப் பெரும் வரவேற்பைப் பெறுமென எதிர் பார்க்கப்படுகின்றது

இந்த வீடியோப் பிரதிகளிற் கவியரங்கம், வழக்காடு மன்றம், பட்டிமண்டபம், மேன்முறையீட்டுப் பட்டிமண்டபம், இசையரங்கம், நாடக அரங்கம், நாட்டிய-நடன அரங்கம், உரையரங்கம் எனப் பலதுறைகளிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை-பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர், கவிஞர் புதுவை இரத்தினதுரை இத்தகவல்களைத் தெரிவித்தார்.

## ஆங்கில கற்கை நெறிப்பயில மீண்டும் பதிவு செய்யலாம்

திறந்த பல்கலைக்கழகத்தால் 1989/90 ஆம் ஆண்டில் உயர் தொழில் ஆங்கில கற்கை நெறிக்கு விண்ணப்பித்து பரீட்சை எடுக்காதவர்களில் பரீட்சையில் திருப்திகரமாக எழுதாதவர்களை மீண்டும் பதிவு செய்தல் அவர்களின் மாணவர் பதிவுப் புத்தகத்தைப் புதுப்பித்தல் என்பன தொடர்பாக உரியவர்களுக்குப் புதிய ஆவணங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இம் மாதம் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் பிரவுண் வீதியில் உள்ள யாழ் பிரதேசநிலையத்தில் பதிவு செய்தல் நடைபெறும் என அறிவிக்கப்படுகின்றது.

முன்னர் விண்ணப்பித்தவர்கள் திங்கள் தவிர்ந்த சனி, ஞாயிறு உட்பட அலுவலக நேரத்தில்தொடர்பு கொள்ளுமாறும்அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழீழ காவல்த்துறை மாணவர்க்குப் பயிற்சி வழங்கும்

போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது குறித்துப் பாடசாலை மாணவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழீழ காவல்த்துறை போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகள் பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களுக்கு போக்குவரத்து விதி முறைகள் குறித்து செய்முறை விளக்கமளிப்பர். (39)

## புகையிரதப் பகுதிக்கு தொழிலாளர்கள் சேர்க்கப்படுவர்

இன விகிதாசார அடிப்படையில் புகையிரத திணைக்களத்துக்குத் தொழிலாளர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான எழுத்துப் பரீட்சை வடக்குக் கிழக்குப் பகுதிகளைத் தவிர்ந்த இடங்களில் நடாத்தப்படும்.

5 ஆம் தரம் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (74

# மாவீரர் தினத்தையொட்டி கலை கலாசார போட்டிகள்

இவ்வாண்டு கார்த்திகை மாதம் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையில் நடைபெற இருக்கும் மாவீரர் தினத்தை ஒட்டிவிடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் நடாத்தப்பட இருக்கும் கலை கலாசாரப் போட்டிகளில் எழுத்தாளர்கள் கலைஞர்கள் மற்றம் இத்துறையில் ஆர்வம் மிக்கோர் மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் படி கேட்கப்பட்டுள்ளனர்.

இப்போட்டிகள்கீழ்க்காணும் விடயங்களில் நடைபெற உள்ளன. கட்டுரை, நாவல், சிறுகதை, கவிதை, சுவரொட்டி.

இவற்றை ஆக்க விரும்புவோர் தமது ஆக்கங்களை 25. 10. 91 க்கு முன்பு எமது பிரதேச மாவட்ட காரியாலயங்களில் அல்லது பத்திரிகைக் காரியாலயங்களில் ஒப்படைக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது

போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறும்

தமிழீழத்தின் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ள இப் போட்டிகளில் ஆர்வம், ஆற்றல் மிக்க அனைவரும் கலந்து கொள்ளலாம்

போட்டிகளுக்கான விதிமுறைகள்:-

தமிழீழ மக்கள் அனைவரும் கலந்து கொள்ளக் கூடிய இப் போட்டிகளின் படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப் போரை அடிப்படையாகக் கொண்டும் அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும் சமகாலத்தில் எமதுமக்களின் பிரச்சனையை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம்.

மண்மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் உணர்வுகளையும் இதயதாகத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

அதே போல் சுவரொட்டிகளின் கருப்பொருள்கள் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் நன்று. இலக்கியப் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்.

சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்கு குறையாமலும் கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். சுவரொட்டிகள் யாவும் ஆட் போட்டில் 60 சென்றிமீற்றர், 40 சென்றி மீற்றர் அளவு கொண்டதாக வண்ணப்படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகிக்கலாம்) கறுப்பு வெள்ளைப்படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.

போட்டியில் பங்கு பற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடசாலை அதிபர்களால் அல்லது வகுப்பு ஆசிரியர்களால் அவர்களுடைய சொந்தப் படைப்பு என உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

போட்டிக்கான கட்டுரைகள் 3000-5000சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் நன்று. போட்டிகளின் தீர்ப்பு தகுதி வாய்ந்த நடுவர் குழுவினால் எடுக்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

மாணவர்களின் போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள் :- மாணவர்களுக்கான போட்டிகள் சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் ஆகியவிடயங்களில் நடைபெறும். இவை மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருக்கும். ஓவியங்கள் 18:12 அளவு கொண்டதாக இருக்க வேண்டும்.

கட்டுரைகள் கீழ் வரும் அம்சங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும், தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி, தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர்காலம், இன்றைய சூழ்நிலையில் மாணவர்களது சமூகப்பணிகள், போராடுவதற்காகக் கற்போம்.

மேற்கண்ட தலைப்புக்களில் கட்டுரைகள் 2000சொற்களுக்கு மேற்படாமல் வரைய வேண்டும். மாணவர்களுக்கான போட்டிகள் யாவும் கீழ்ப்பிரிவு மத்திய பிரிவு, மேற் பிரிவு ஆகிய பிரிவுகளாக நடைபெறும்.

15 வயதுக்கு உட்பட்டோர் கீழ் பிரிவு, 15-17க்கு இடைப்பட்டோர் மத்திய பிரிவு, 17க்கு மேற்பட்டோர் மேற் பிரிவு.

ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்.

## புவியியல் கருத்தரங்கு

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் மக்களின் உள் வெளி இடப்பெயர்வும்விளைவுகளும் என்ற தலைப்பில் கருத்தரங்கொன்று யாழ் பல்கலைக்கழக புவியியல் விரிவுரை மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

### கொழும்பு...

வத்தைப் பகுதியில் வெடிமருந்துகளைச் சேமித்து வைத்ததாகவும் புலனாய்வுக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

தாக்குதல் நடாத்தப்பட்டதற்கு இரண்டு நாள்களுக்கு முன்பாக 19 ஆம் திகதி வெடிகுண்டு வாகனம் தயார் செய்யப்பட்டுத் தாக்குதலுக்குத் தயாரான நிலையில் வைக்கப்பட்டது.

இவ்வாறு, புலனாய்வுக் குழுவினர் நேற்றுத் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கொழும்புக்கு

## தரைமார்க்கமாகவும் நோயாளிகள் செல்லலாம்

தரைமார்க்கமாகக்கொழும்புக்கு நோயாளிகளை அம்புலன்ஸ் வாகனங்களிற் கொண்டுசெல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு யுத்தம் ஆரம்பித்ததில் இருந்து கடும் நோயாளிகள் இங்கிருந்து கப்பல் மூலமாகவே கொழும்பு சென்று வருகின்றனர்.

கப்பல் மூலமாகச் செல்லும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அண்மைக்காலங்களில் குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் நோயாளிகளை வவுனியா ஊடாக அம்புலன்ஸில் கொண்டு செல்லலாம் எனத்தெரிவிக்கப்படுகிறது. 74

## 200 மைல் கடற்கரைப் பகுதி பாதிக்கப்பட்டுள்ளது

அண்மையில் ஏற்பட்ட சீரற்ற கால நிலையால் புத்தளத்தில் இருந்து திக்வெல்லை வரை சுமார் இரு நூறு மைல் கடற்கரைப்பகுதி பாதிக்கப்பட்டுள்ளதாகக்கடற்கரை பாதுகாப்பு திணைக்களத் தலைவர் புள்ளி விவரங்களுடன் தெரிவித்துள்ளார்.

ஐம்பத்தி மூன்று வருடங்களுக்கு பின்னர் (1938ஆம் ஆண்டுக்கு பின்னர்) முதற்தடவையாக நாட்டின் கடற்கரைப் பகுதி இவ்வாறுபாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இப்பகுதியில் கடல் அரிப்புக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளும் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

பதினெட்டு அடி உயரத்துக்கு மேற்பட்ட கடல் அலைகளின் தாக்கம் இப்பகுதியில் நிலவியதாகவும் இதனால் இப்பகுதியில் வீடுகள், வீதிகள் ரயில்பாதைகள் என்பன பெரும் சேதத்துக்குள்ளாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 33

### மட்டக்களப்பு...

னர் மிதிவெடிகளை வைத்துள்ளதாலேயே தாம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இப்பகுதிக்கு பசளை, கிருமிநாசினி என்பவற்றை அனுப்ப அரசு மறுத்துவருவதாலும் தாம் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (74

### மன்னார்த்தீவு...

லெப் காளி (அ. புவிராசசிங்கம் மட்டக்களப்பு), பரமேஸ் (க. உதயகுமார் பூநகரி, வதனன் (த மேம்பிரிஸ் வங்காலை ஆகியோரே வீரமரணமடைந்தவர்கள்.

### பதிவு

பதிவு செய்யாத இலங்கையரை நாடு கடத்துவது தொடர்பாக இந்திய மத்திய அரசு இலங்கை அரசுடன் பேசி உடன் முடிவு எடுக்க வேண்டும் எனத் தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளார்

அகதி முகாம்களுக்கு வெளியே ஐம்பதாயிரம் இலங்கையர் இருந்த போதிலும் நேற்று வரை ஐயாயிரம் பேரே பொலிஸில் தம்மை பதிவுப் செய்துள்ளதாக ஜெயலலிதா சுட்டிக்காட்டினார்.

1987 ஆம் ஆண்டிலேயே

## பெண் மூலமே ஆபத்தென ராஜீவுக்கு எச்சரிக்கை!

இந்திய முன்னால் பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஒரு பெண்ணின் மூலமாகவே ஆபத்து வரலாமென நான்கு வருடங்களுக்கு முன்பே இரகசியப் பொலிஸாருக்குத்தகவல் கிடைத்தது.

1987 ஆண்டில் ராஜீவ் காந்தி நேரு சிலையைத் திறப்பதற்கு சென்னைக்கு வந்த போது அவருக்கு ஒரு பெண்ணால் ஆபத்து உருவாகுமெனக் கிடைத்த தகவலை அடுத்து இரகசியப் பொலிஸார் உஷார் படுத்தப்பட்டனர்.

இந்தத் தகவலை மையமாக வைத்து அன்று விசாரணை மேற்கொண்ட இரகசிய பொலிஸார் 60 பக்கங்கள் கொண்ட இரகசிய அறிக்கையைத் தயாரித்தனர்.

அந்த அறிக்கையின் படி ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்த இளம் பெண்ணால் அவர் உயிருக்கு ஆபத்து நிகழக் கூடும் எனக் குறிப்பிடப் பட்டிருந்தது. 33

## திருகோணமலை நகரில் விசேட அடையாள அட்டை

திருகோணமலை நகரப்பகுதியில் வாழும் மக்களுக்கு பொலிஸார் விசேட அடையாள அட்டைகளை வழங்கியுள்ளனர்.

15 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலருக்கும் கிராம சேவையாளர்கள் மூலமாக இந்த விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

வெளிமாவட்டங்களில் இருந்து இங்கு வந்து தங்கியிருப்போரை அடையாளம் காண்பதற்காகவே இவை வழங்கப்படுவதாக திருமலைச் செய்திகள் கூறுகின்றன. (74)

காவிரி ஆறு தொடர்பாக

## கர்நாடக மாநில அரசை மிரட்டும் ஜெயலலிதா!

தமிழக முதலமைச்சராக பதவியேற்று ஒரு வாரமே பூர்த்தியடைந்துள்ள நிலையில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அண்டை மாநிலமான கர்நாடகத்தை மிரட்டியுள்ளார்.

காவிரி ஆற்றுநீர் பங்கீடு தொடர்பாக நடுவர்மன்றம் அளித்த தீர்ப்பின்படி தமிழகத்திற்கு கர்நாடகம் உடனடியாக நீரை வழங்கவேண்டும் என எச்சரித்துள்ள ஜெயலலிதா, இது தொடர்பாக இப்போதைக்கு கர்நாடகப் மாநிலத்துடன் எந்த வித பேச்சும் நடாத்த முடியாது என்றார்.

முதலில் தமிழகத்திற்கு நீர் வழங்கப்பட வேண்டும். அதன் பின்னரே கர்நாடக அரசுடன் பேச்சு. இது தொடர்பாக தாம் மத்திய அரசிடம் முறையிடவுள்ளதாகவும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

## இந்திய ரூபாவின் மதிப்பு மேலும் குறைப்பு

இந்திய ரூபாவின் மதிப்பு நேற்று மீண்டும் குறைக்கப்பட்டது. முன்னர் 9 வீதமாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட இந்திய ரூபா நேற்று 18 வீதமாக மதிப்பிறக்கப்பட்டது.

தற்போதைய நிலையில் இந்தியரூபா அமெரிக்க டொலருக்கு எதிராக ஒரு டொலருக்கு 25 எனக்குறைந்துள்ளது

### லோகசபை

மையை நிரூபிக்க வேண்டியுள்ளது.

காங்கிரஸ் அரசுக்கு பெரும்பான்மை பெற 20 ஆசனங்களே குறைவாகவுள்ளன. எனினும் காங்கிரசுக்குச் சில எதிர்க் கட்சிகள் ஆதரவளிக்கலாம் எனக் கூறப்படுகிறது.

### இனப்

திலும் விடக் கூடியளவு அதிகாரம்இத்திட்டத்தில் அடங்கியுள்ளது.

எனினும் தமிழர் தரப்பில் அதிகமாக விரும்பப்படும் சமஷ்டி அமைப்பு குறித்து ஏதும் இத்திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

இப்புதிய சமரஸத்திட்டத்தை ஜனாதிபதி பிரேமதாஸ ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் இது விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

ராஜீவ் காந்தியின் கொலையினால் எழுந்துள்ள நிலைமைகளே இத்திட்டம் குறித்து அரசு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கமுடியாமல் போனதற்கு காரணம் எனவும்

ராஜீவ்அலை ஓய்ந்தபின்னர் இத்திட்டம் மீண்டும் முக்கிய இடத்தை இலங்கை அரசியலில் பிடிக்கலாம் எனவும் புரொன்ட்லைன் சஞ்சிகை குறிப்பிட்டுள்ளதாம்,

### மேடையேறுகிறது

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பெற்ற முத்தமிழ் விழாவில் மேடையேற்றப்பட்ட நாடக அரங்கக் கல்லூரியினரின் 'உயிர்த்த மனிதர் கூத்து' நாடகம் இன்று மாலை 4 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் மேடையேறுகின்றது.

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் ஆதரவில் மேடையேறும் இந் நாடகத்திற்கான அனுமதிச் சீட்டுக்களை ரூபா 10 அன்பளிப்புச் செலுத்தி மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்.

### பிரிட்டனின்...

இலங்கைக்கு எந்தவிதமான பிரிட்டிஷ் குழுவும் கலாசார குழுவினர் உட்பட வருவது தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு தனது அதிருப்தி குறித்தும் 13 மில்லியன் பவுன்ஸ் உதவி நிறுத்தம் குறித்தும் கடிதம் எழுதியுள்ளாராம்.

### குண்டு...

லில் வைக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக் குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் நாலு பேர் தொடர்பு கொண்டுள்ளனர் எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. ப-11

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டசவீதி 'லக்ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 04.07.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.